

# ‘சமூக வடு’: இலங்கையில் பாலியல் வன்முறை காரணமாக ஏற்படும் களங்கம்

## அறிமுகம்

சமத்துவம் மற்றும் நீதிக்கான நிலையத்தினால் முன்னெடுக்கப்பட்ட ‘சமூக வடு: இலங்கையில் முரண்பாடு சம்பந்தப்பட்ட பாலியல் வன்முறையினால் ஏற்படும் களங்கம்’ என்ற கற்கையின் அடிப்படையில் இந்த சுருக்கக் கட்டுரை அமைந்துள்ளது. முப்பத்-திரண்டு பாதிக்கப்பட்டு-தப்பியவர்கள் (Victim Survivors), எட்டு பாதிக்கப்பட்டு தப்பியவர்களின் பிரதிநிதிகள், மற்றும் ஒன்பது சேவை வழங்குநர்களிடமிருந்து பெறப்பட்ட தரவுகளின் பகுப்பாய்வினை இந்தக் கற்கை உள்ளடக்குகின்றது.

மோதலுடன் தொடர்புடையதான பாலியல் வன்முறையால் (Conflict Related Sexual Violence - CRSV) பாதிக்கப்பட்டு-தப்பியவர்கள் மீது ‘வன்முறைச் சக்கரத்தின்’ களங்கம் திணிக்கப்படுவதாக, அத்தகைய பாதிக்கப்பட்டு-தப்பியவர்களினால் அனுபவிக்கப்பட்ட களங்கத்தின் மதிப்பீட்டாய்வானது குறிப்பிடுகின்றது. இந்தச் சுருக்கக் கட்டுரை இக் கற்கையினை சாரம்சப்படுத்துகின்றதுடன் பாதிக்கப்பட்டு-தப்பியவர்களினதும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களினதும் மற்றும் அச் சமூகத்திலுள்ள பெண்களினதும் வாழ்க்கையின் அனைத்து மட்டங்களிலும் மோதலுடன் தொடர்புடையதான பாலியல் வன்முறையினால் எழக் கூடிய களங்கத்தின் தாக்கத்தினை சுட்டிக்காட்டுகின்றது.

## கற்கை சம்பந்தப்பட்ட அடிப்படைத் தகவல்கள்

### *கற்கை எவ்வாறு முன்னெடுக்கப்பட்டது?*

- கற்கையை நிறைவு செய்வதற்குத் தேவையான அடிப்படைத் தரவுகளை சேகரிப்பதற்கு கலப்பு-கட்டமைப்புசார் நேர்காணல்கள் (Semi – structured interviews) பயன்படுத்தப்பட்டன. சிங்களம் மற்றும் தமிழில் அத்தகைய ஐம்பத்து மூன்று நேர்காணல்கள் முன்னெடுக்கப்பட்டன. மூன்று குழுக்கள் (Three group of individuals) தகவல்களை வழங்குவதன் மூலம் கற்கைக்கு பங்களித்தன. முரண்பாடு சம்பந்தப்பட்ட பாலியல் வன்முறையில் பாதிக்கப்பட்டு தப்பியவர்கள், அவர்களின் பிரதிநிதிகள் மற்றும் சேவை வழங்குநர்கள் தமது இரகசியத் தன்மை காக்கப்பட வேண்டும் என்ற உத்தரவாதத்துடன் தமது அனுபவங்களை பகிர்ந்துகொண்டனர். கற்கையுடன் சம்பந்தப்பட்ட ஏனைய பங்குபற்றுனர்கள் ஸ்னோ-போலிங் முறையின் (snow-balling method) ஊடாக அடையாளப்படுத்தப்பட்டனர்.

| *நேர்காணப்பட்டவர்கள்* | |
|---|---|
| • பாதிக்கப்பட்டு-தப்பியவர்களும், பாதிக்கப்பட்டவர்களின் பிரதிநிதிகளும் | 40 |
| • சேவை வழங்குநர் | 13 |
| • ஆண் பாதிக்கப்பட்டு-தப்பியவர்கள் | 02 |

### *கற்கை முன்னெடுப்பதில் எதிர்கொண்ட சவால்கள் எவை?*

- மோதலுடன் தொடர்புடையதான பாலியல் வன்முறை சம்பந்தப்பட்ட களங்கத்தினால் பாதிக்கப்பட்ட மற்றும் பாதிக்கப்பட்டு-தப்பியவர்களின் வாழ்க்கை அனுபவங்களை புரிந்துகொள்வது சிக்கலானது. எனவே, அவர்களின் களங்கத்தின் முழுமையான

Centre for Equality and Justice
British High Commission Colombo

உணர்வுசார் அளவினை ஈர்த்துக் கொள்ளும் சாத்தியம் சவால் மிக்கதாகும். பெரும்பாலான பாதிக்கப்பட்டு தப்பியவர்கள், மீள நிகழக் கூடும் மற்றும் களங்கம் ஏற்படக் கூடும் என்ற அச்சத்தின் காரணமாக கற்கையில் பங்குபற்றுவதற்கு ஆர்வமின்றி இருந்தனர். இதனால் இலகுவில் பாதிக்கப்படக் கூடிய மக்கள் தொகையான பாதிக்கப்பட்டு-தப்பியவர்களை அணுகுவது சவால் மிக்கதாக இருந்தது.

- இந்தக் கற்கையானது பாதிக்கப்பட்டு தப்பியவர்கள், அவர்களின் பிரதிநிதிகள் மற்றும் சேவை வழங்குநர்களினால் பகிரப்பட்ட அனுபவங்களின் அடிப்படையில் வரையறுக்கப்பட்டதாகும். பாலியல் வன்முறையினால் ஏற்படக் கூடிய களங்கத்தின் தாக்கத்தை மதிப்பீடு செய்வதே இந்தக் கற்கையை முன்னெடுப்பதற்கான நோக்கமாகும். ஆகவே குற்றம் சுமத்தப்பட்டவர்களது அடையாளம் அல்லது மோதலுடன் தொடர்புடையதான பாலியல் வன்முறைச் சம்பவம் சார்ந்த விசேட தகவல்களோ கற்கையில் கவனத்தில் கொள்ளப்படவில்லை.

## மோதலுடன் தொடர்புடையதான பாலியல் வன்முறை

### *மோதலுடன் தொடர்புடையதான பாலியல் வன்முறை என்றால் என்ன?*

“யுத்தத்திற்குப் பின்னரான இலங்கை: பாலியல் வன்முறையால் பாதிக்கப்பட்டு தப்பியவர்கள் மற்றும் வல்லுறவின் காரணமாக பிறந்த பிள்ளைகளின் குறிப்பான தேவைகள்” (யு என் விமென் UN WOMEN 2017) என்ற அறிக்கைக்கு அமைய, மோதலுடன் தொடர்புடையதான பாலியல் வன்முறை என்பதில் சிறுவயதுத் திருமணம், பலவந்தமான திருமணம், பாலியல் சுரண்டல், வல்லுறவு, கூட்டுப் பாலியல் வல்லுறவு, பாலியல் துஷ்பிரயோகம், பாலியல் பலாத்காரம், தொடர்ச்சியான பரிசோதனைச் சாவடி தொந்தரவுகள், குடும்ப வன்முறை, ஆட்கடத்தல், விருப்பத்திற்கு மாறான கர்ப்பந் தரித்தல், பலவந்த கருத்தடை, பாலியல் சித்திரவதை, திருமணத்திற்கு புறம்பான வல்லுறவு, இராணுவ கண்காணிப்பின் போதான வன்முறை, தொந்தரவு என்பனவும் உள்ளடங்குகின்றன.

> *சர்வதேசத் தராதரங்களுக்கு அமைய மோதலுடன் தொடர்புடையதான பாலியல் வன்முறை என்றால் என்ன?*
>
> “முரண்பாட்டுடன் நேரடியாக அல்லது மறைமுகமாக சம்பந்தப்பட்ட வல்லுறவு, பாலியல் அடிமைத்தனம், பலவந்த பாலியல் தொழில், பலவந்த கர்ப்பம் தரித்தல், பலவந்த கருத்தடை, பலவந்த மலடாக்கல், பலவந்த திருமணம், மற்றும் பெண்கள், ஆண்கள், சிறுமியர் அல்லது சிறுவருக்கு எதிராக இழைக்கப்படும் தன்மையின் ஒப்பீடு சார் ஏனைய வடிவ பாலியல் வன்முறை [...] முரண்பாட்டுச் சூழலில் பாலியல் வன்முறை அல்லது சுரண்டலுக்காக முன்னெடுக்கப்படும் ஆட்கடத்தலையும் இந்த பதம் உள்ளடக்கும்”.
>
> *-முரண்பாடு சார் பாலியல் வன்முறை, செயலாளர் நாயகத்தின் அறிக்கை, ப.3*

> *இலங்கையின் குற்றவியல் நீதி முறைமையில் மோதலுடன் தொடர்புடையதான பாலியல் வன்முறை அடையாளங் காணப்பட்ட, வரையறுக்கப்பட்ட நிலைமைகள் என்ன?*
>
> - *கிரிஷாந்தி குமாரசுவாமி வழக்கு (1996)*
> - *மருதானை வல்லுறவு வழக்கு (2001)*
> - *விஸ்வமடு வல்லுறவு வழக்கு (2010)*
> - *யாழ்ப்பாணத்தில் பருவமானவர் கூட்டு வல்லுறவு வழக்கில் டிரயல்-அட்-பார்* (Trial-at-bar) *(2015)*

### *எப்போது மோதலுடன் தொடர்புடையதான பாலியல் வன்முறை நிகழும்?*

- மோதலுடன் தொடர்புடையதான பாலியல் வன்முறையானது முரண்பாடு, முரண்பாட்டின் பின்னர் அல்லது அரசியல் கலவரம் போன்ற கரிசனை செலுத்த வேண்டிய சூழ்நிலைகளில் மற்றும் பலவீனமான அரச ஆற்றல் மற்றும் தண்டனை பயமற்றச் சூழல் என்பவற்றின் போது நேரலாம்.

## கற்கையில் பிரதானமாக கண்டறிந்தவை

- மோதலுடன் தொடர்புடையதான பாலியல் வன்முறையினால் தப்பிய பெரும்பாலானவர்கள் களங்கத்தை அனுபவிப்பதாக இக்கற்கை கண்டறிந்தது. மேலும், பொதுவாக மோதலுடன் தொடர்புடையதான பாலியல் வன்முறையில் பாதிக்கப்பட்டவர்களாக கருதப்படாத ஆண்கள், மோதலுடன் தொடர்புடையதான பாலியல் வன்முறையின் களங்கத்தை முகம்கொடுப்பதிலும் அடையாளம் காணுவதிலும் தனித்துவமான சவால்களை எதிர்கொள்கின்றனர்.

- மோதலுடன் தொடர்புடையதான பாலியல் வன்முறையின் காரணமாக ஏற்படும் களங்கம் பாதிக்கப்பட்டு தப்பியவர்களின் சுய மற்றும் அவர்களது அபிலாஷைகளில் தாக்கம் புரிகின்றது. மேலும் கற்கையானது வன்முறைச் சக்கரத்திற்கு களங்கம் இட்டுச் செல்வதாக கண்டறிந்தது.

- மோதலுடன் தொடர்புடையதான பாலியல் வன்முறையின் காரணமாக ஏற்படும் களங்க-மானது பாதிக்கப்பட்டு-தப்பியவர்களின் குடும்ப உறுப்பினர்கள் மற்றும் அவர்களில் தங்கியிருப்பவர்களிலும் தாக்கம் செலுத்துகின்றது.

களங்கமானது பாதிக்கப்பட்டு-தப்பியவரின் சமுதாயத்துடனான உறவில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.

- இக் கற்கையானது மோதலுடன் தொடர்புடையதான பாலியல் வன்முறையுடன் சம்பந்தப்பட்ட களங்கமானது பாதிக்கப்பட்டு-தப்பியவர்கள் மருத்துவ சேவைகள் மற்றும் குற்றவியல் நீதி உள்ளடங்கலாக பல்வேறு சேவைகளை அணுகுவதனை தடை செய்வதாகவும் கண்டறிந்தது.

- சமுதாயம் சார் நிறுவனங்களானவை அரச சேவைகளில் உள்ள இடைவெளிகளை நிரப்பி, பாதிக்கப்பட்டு-தப்பியவர்களுக்கு வலுப்படுத்தலை வழங்குவதாக கற்கையின் முடிவுகள் கண்டறிந்தன. சில சூழ்நிலைகளில், பாதிக்கப்பட்டு-தப்பியவர்கள் சேவைகளை அணுகுவதற்கும், வெற்றிகரமாக குற்றவியல் நீதியை நாடுவதற்கும் அத்தகைய நிறுவனங்கள் உதவின. எவ்வாறாயினும், சமுதாயம் சார் நிறுவனங்களின் ஊடாக உதவி வழங்கப்படும் போது, களங்கத்திற்கு இட்டுச் செல்லக் கூடும் என்பதால் அது மிகவும் அவதானமாகக் கையாளப்படல் வேண்டும் எனவும் கண்டறியப்பட்டது.

- மோதலுடன் தொடர்புடையதான பாலியல் வன்முறை மற்றும் களங்கத்திற்கு எதிராக பரிந்து பேசுவதில் ஆபத்துக்கள் இருப்பதாக கண்டறியப்பட்டது. களங்கத்தின் காரணமாக சுதந்திரம் மற்றும் பாதுகாப்புக்கு ஆபத்து ஏற்பட்ட சந்தர்ப்பங்களும் உள்ளன. எடுத்துக்காட்டாக, பாலியல் தொழில் சம்பந்தப்பட்ட களங்கத்திற்கு எதிராக குரல் எழுப்பியமையானது, பாதிக்கப்பட்டு-தப்பியவரின் உடைமைகள் எரிக்கப்படுவதற்கும், இறுதியில் அவர் தமது கிராமத்தை விட்டு வெளியேறவும் காரணமாகியது. மேலும், மோதலுடன் தொடர்புடையதான பாலியல் வன்முறையினை அனுபவித்தவர்களுக்கு ஆதரவு வழங்கும் போது தாம் எதிர்கொள்ள நேருகின்ற ஆபத்துக்களை பாதிக்கப்பட்டு-தப்பியவர்களின் பிரதிநிதிகள் நினைவுகூர்ந்தனர். இவை 'களங்கத்தை எதிர்கொள்வதில் மேலதிக தடைகளை' ஏற்படுத்துவதாகவும் கற்கை கண்டறிந்தது.

## பாதிக்கப்பட்டு-தப்பியவர்கள் மற்றும் குற்றமிழைத்தவர்கள்

### *பாதிக்கப்பட்டு-தப்பியவர்கள் யார்?*

- இரு ஆண் பாதிக்கப்பட்டு-தப்பியவர்கள் தவிர கற்கைக்காக நேர்காணப்பட்ட ஏனையோர் பெண்களாவர். எவ்வாறாயினும், பாதிக்கப்பட்டு-தப்பியவர்கள் ஆண்களாக, பெண்களாக, அல்லது இரு பாலினையும் சேர்ந்த பிள்ளைகளாகவும் இருக்க முடியும் என்பதனை கவனத்தில் கொள்ள வேண்டும். பாலியல் வன்முறையினால் பாதிக்கப்படுபவர்கள் பெண்கள் மாத்திரமே என்ற பொதுவான எண்ணப்பாடு காணப்படுவதால், ஆண்களை பாதிக்கப்பட்டவர்களாக சமூகம் பார்க்காமை போன்ற ஏனைய சவால்களையும் ஆண் பாதிக்கப்பட்டு-தப்பியவர்கள் எதிர்கொள்கின்றனர்.

- ஐக்கிய நாடுகளின் குற்றம் மற்றும் அதிகார துஷ்பிரயோகத்தின் பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதிக்கான அடிப்படை கோட்பாடுகள் பிரகடனத்திற்கு அமைய, பாதிக்கப்பட்டவர்கள் என்பது, *"உடல்சார் அல்லது மனம்சார் காயம், உணர்வுசார் துன்பம், பொருளாதார இழப்பு அல்லது அதிகாரத்தின் குற்றவியல் துஷ்பிரயோகமாக அமையும் சட்டங்கள் உள்ளடங்கலாக, உறுப்பு நாடுகளில் நடைமுறையில் உள்ள குற்றவியல் சட்டத்தில் மீறல்களாக உள்ள செயற்பாடுகள் அல்லது நீக்கல் ஊடாக அவர்களது அடிப்படை உரிமைகள் குறிப்பிடத்தக்களவு மீறப்படல் உள்ளடங்கலாக தீங்கினை தனிப்பட்டரீதியாக அல்லது கூட்டாக அனுபவித்த நபர்கள்"* ஆவர்.

### *குற்றமிழைத்தவர்கள் யார்?*

- திருமணம் புரிந்த வாழ்க்கைத் துணை, ஏனைய நெருக்கமான குடும்ப உறுப்பினர்கள், படைப்பிரிவின் உறுப்பினர்கள், பொது அதிகாரிகள், பொலிஸ் அதிகாரிகள், சமுதாயத்தில் உள்ள ஆண்கள் மற்றும் அந்நியர்கள் உள்ளடங்கலாக பல்வேறு குற்றம் சுமத்தப்பட்டவர்களால் தாம் பாலியல் வன்முறைக்கு உள்ளானதாக இந்தக் கற்கைக்காக நேர்காணப்பட்ட பாதிக்கப்பட்டு-தப்பியவர்கள் கூறினர். முரண்பாட்டுடன் நேரடியாக தொடர்புபட்ட தரப்புக்களினால் மாத்திரமன்றி, குடும்ப உறுப்பினர்கள் உள்ளடங்கலாக ஏனைய தனிநபர்களாலும் பாலியல் வன்முறைக்கு ஆளாக்கப்பட்டதாக இந்தக் கற்கையின் போது பாதிக்கப்பட்டு-தப்பியவர்கள் விளக்கிய அனுபவங்களில் இருந்து கண்டறியக் கூடியதாகவிருந்தது.

- பாலியல் வன்முறைச் சம்பவம் ஒன்று தொடர்பில் சமூகமும், சட்டமும் செயற்படும் விதமானது, வன்முறையில் சம்பந்தப்பட்ட தரப்புக்களின் அந்தஸ்து சார்ந்து மாறுபடக் கூடும். குடும்ப உறுப்பினர்கள் மற்றும் சமுதாயத்தில் உள்ள ஆண்கள் போன்ற முரண்பாட்டுடன் நேரடியாக தொடர்புபடாத தரப்புக்களால் இழைக்கப்படும் பாலியல் வன்முறையானது, முரண்பாட்டின் தரப்பு ஒன்றினால் இழைக்கப்பட்ட பாலியல் துஷ்பிரயோகத்துடன் எந்தளவு சம்பந்தப்பட்டிருக்கின்றது என்ற அடிப்படையில் மாத்திரம், குறிப்பிட்ட சூழ்நிலைகளில் மோதலுடன்

தொடர்புடையதான பாலியல் வன்முறைக்குள் உள்ளடக்கப்படலாம். அத்தகைய வன்முறைகளை மோதலுடன் தொடர்புடையதான பாலியல் வன்முறை என வகைப்படுத்துவதற்கான சாத்தியங்கள் தொடர்பிலும் வரையறைகள் உள்ளன. முரண்பாட்டுடன் நேரடியாக தொடர்புபடாத தரப்பு ஒன்றினால் இழைக்கப்படும் பாலியல் வன்முறைச் சம்பவம் ஒன்று மோதலுடன் தொடர்புடையதான பாலியல் வன்முறை எனக் கருதப்படக் கூடிய மூன்று சாத்தியங்களை இந்த அறிக்கை அடையாளப்படுத்துகின்றது. அவையாவன:

i) மோதலுடன் தொடர்புடையதான பாலியல் வன்முறையானது பாதிக்கப்பட்டு-தப்பியவர்களை முரண்பாட்டில் நேரடியாக சம்பந்தப்படாத தரப்புக்களினால் பாலியல் வன்முறைக்கு எளிதில் பாதிக்கப்படக் கூடியவர்களாக்குகின்றது.

ii) நெருக்கமான வாழ்க்கைத் துணை, குடும்ப உறுப்பினர்கள் போன்வர்களால் மேற்கொள்ளப்படும் பாலியல் வன்முறையானது, பாதிக்கப்பட்டு-தப்பியவர்களை மோதலுடன் தொடர்புடையதான பாலியல் வன்முறைக்கு எளிதில் பாதிக்கப்படக் கூடியவர்களாக்குகின்றது.

iii) முரண்பாடு சார் சமூக பலவீனங்களின் காரணமாக, சிறு வயது திருமணத்திற்கு சிறுமியர் செல்கின்றனர் மற்றும்/அல்லது தள்ளப்படுகின்றனர்.

- பாதிக்கப்பட்டு-தப்பியவர்களுடன் பொது அதிகாரிகள் தொடர்ச்சியாக தொடர்பில் இருக்க நேர்ந்த சந்தர்ப்பங்களில், பாலியல் இலஞ்சம் அல்லது பாலியல் நடவடிக்கை சார் முன்னெடுப்புக்களின் மூலம் மேலதிக பாலியல் வன்முறைக்கு உள்ளாகியமையை கற்கை கண்டறிந்தது. பாதிக்கப்பட்டு-தப்பியவர்களின் கருத்திற்கமைய, பெரும்பாலான அத்தகைய வன்முறைகளை மோதலுடன் தொடர்புடையதான பாலியல் வன்முறையுடன் சம்பந்தப்பட்ட களங்கத்துடன் தொடர்புபடுத்த முடியும்.

## மோதலுடன் தொடர்புடையதான பாலியல் வன்முறையுடன் சம்பந்தப்பட்ட களங்கம்

### *களங்கம் என்றால் என்ன?*

- மூன்று காரணங்களினால் களங்கம் ஏற்படலாம்:

i) அறிவுத்திறன் பிரச்சினைகள்: மோதலுடன் தொடர்புடையதான பாலியல் வன்முறையின் தன்மை குறித்து அல்லது அதனைச் சூழவுள்ள விளைவுகளை அறியாதவர்கள், தமது அறியாமையின் காரணமாக பாதிக்கப்பட்டு-தப்பியவர்களை களங்கத்துக்கு உள்ளாக்கலாம். மேலும், மோதலுடன் தொடர்புடையதான பாலியல் வன்முறை மற்றும் பாதிக்கப்பட்டு-தப்பியவர்கள் பற்றிய தவறான தகவல் பரவுதல் காரணமாகவும் அறிவுத்திறன் பிரச்சினைகள் நிகழலாம்.

ii) மனப்பான்மைசார் பிரச்சினைகள்: பாரபட்சமான உளப்பாங்குகளை மக்கள் கொண்டிருக்கும் போது, பாதிக்கப்பட்டு-தப்பியவர்களை புரிந்து கொள்ள அவர்கள் மறுக்கலாம். எடுத்துக்காட்டாக, சமுதாய நிகழ்வுகளுக்கு பாதிக்கப்பட்டு-தப்பியவர்கள் அணுகுவதனை மறுப்பதற்கு பாரபட்சமான மனங் கொண்டவர்கள் தள்ளப்படலாம். சமூக ஒன்றுகூடல்களில் அவர்கள் ஏற்றுக்கொள்ளப்படாதிருக்கலாம்.

iii) நடத்தைப் பிரச்சினைகள்: பாதிக்கப்பட்டு-தப்பியவர்களை சமூகத்திற்குள் ஏற்றுக்கொள்ளாது அல்லது அவர்கள் எதிர்கொண்ட மோதலுடன் தொடர்புடையதான பாலியல் வன்முறையினை நியாயப்படுத்தி, எடுத்துக்காட்டாக ‘எதிரி’ சமூகம் என அறியப்படும் வித்தியாசமான இனம் அல்லது மதத்தினைச் சார்ந்தவர்கள் எனக் குறிப்பிட்டு பாரபட்சமான நடத்தைகளை சிலர் வெளிப்படுத்தலாம்.

- களங்கத்தினை பின்வருமாறு வகைப்படுத்தலாம்:
  - சுய-களங்கம்
  - குடும்ப களங்கம்
  - சமூகத்திலிருந்து எழும் களங்கம்

- சர்வதேச பின்னனியில் களங்கம் என்பது வகைப்படுத்தப்பட்டும், விளக்கப்படுத்தப்பட்டு இருக்கின்ற போதிலும், இலங்கைப் பின்னணியில் களங்கம் என்பதற்கான தெளிவான புரிந்துணர்வு இல்லை. மேலும், களங்கத்தை அடையாளப்படுத்துவதற்கான இலக்கு வைக்கப்பட்ட நேரடியான சட்ட பிரிவுகளோ அல்லது கொள்கைகளோ இல்லை.

- இவ் விழிப்புணர்வின்மையானது களங்கமானது பாதிக்கப்பட்டவர்களில் எவ்வாறு நீண்ட கால தாக்கத்தை ஏற்படுத்தும் என்பது பற்றிய புரிந்துணர்வின்மைக்கு இட்டுச் சென்றுள்ளது.

> நல்லிணக்கம் மற்றும்/அல்லது சகவாழ்வினை கொண்டு வருவதற்கு, முரண்பாடு சார் பாலியல் வன்முறையின் காரணமான களங்கத்தை அடையாளப்படுத்துவதற்கான ஒரு அரச கடப்பாட்டினை அல்லது சமூகம்சார் பொறுப்பினை, 2017ஆம் ஆண்டின் நல்லிணக்கம் மற்றும் சகவாழ்வு தொடர்பான தேசிய கொள்கை அங்கீகரிக்கவில்லை.

- *யூ என் விமென்* இனால் வெளியிடப்பட்ட அறிக்கை ஒன்றிற்கு அமைய, மோதலுடன்

தொடர்புடையதான பாலியல் வன்முறையினால் உருவாகிய களங்கமானது சூழ்நிலைக்கு ஏற்ப வேறுபடும். யுத்தத்தினால் பிறந்த குழந்தைகள் அனுபவிக்கும் களங்கத்தின் தன்மையானது, வல்லுறவினால் பிறந்த குழந்தை அனுபவிக்கும் களங்கத்தின் தன்மையில் இருந்து வேறுபட்டது என குறிப்பிடுகின்றது.

- சர்வதேச மட்டத்தில், களங்கம் என்பது தளர்வூட்டும் தோற்றப்பாடாக அடையாளங் காணப்பட்டுள்ளது. ஐ.நா செயலாளர் நாயகத்தின் 2017ஆம் ஆண்டு அறிக்கைக்கு அமைய, களங்கம் என்பது, “அதிகமான வகையில் அக்கறை செலுத்த வேண்டிய விடயமாகும்”. இது பாலியல் வன்முறையினால் பாதிக்கப்பட்டு தப்பியவர்களை “இருமடங்கு மனஅதிர்ச்சிக்கு உள்ளாக்கும்” எனக் குறிப்பிட்டுள்ளது. மன அதிர்ச்சியானது முதலில் குற்றமிழைப்பவரால் உருவாக்கப்படுவதுடன் பின்னர் சமூகத்தினாலும், அரசினாலும் உருவாக்கப்படுகின்றது.

> மோதலுடன் தொடர்புடையதான பாலியல் வன்முறை பற்றிய அதிகரிக்கும் விழிப்புணர்வு மற்றும் ஆழமான புரிந்துணர்வின் அதிகரிப்புடன், முரண்பாடு சார் பாலியல் வன்முறையின் காரணமாக ஏற்படும் களங்கத்தினை மிக முக்கியமான, உடனடியான மற்றும் நிலையான இடையீடுகளாக ஐ.நா. தற்போது அடையாளங் கண்டுள்ளது.

- செயலாளர் நாயகத்தின் அறிக்கைக்கு அமைய, அவமானம் மற்றும் களங்கம் என்பன “பாலியல் வன்முறையின் தர்க்கத்திற்கு ஒருங்கிணைந்த பகுதியாகும்”.

- ஐக்கிய இராச்சிய அரசாங்கத்தினால் தயாரிக்கப்பட்ட உலக நடவடிக்கைக்கான கோட்பாடுகள்: முரண்பாட்டில் பாலியல் வன்முறை சம்பந்தப்பட்ட களங்கத்தை தடுத்தல் மற்றும் அடையாளப்படுத்தல் அறிக்கையில் “தமது சமுதாயம் அல்லது சமூகத்திற்கான தரங்களில் இருந்து “மீறியமை” அல்லது அவமானத்தை கொண்டு வந்ததாக தனிநபர்கள், குழுக்கள் அல்லது சமூகங்கள் மீது குற்றம் சுமத்தல் அல்லது குற்றம் வைத்தல் சம்பந்தப்பட்டதாக களங்கம் உள்ளது. தனிநபர் பெறுமதிகள், நம்பிக்கைகள் அல்லது உளப்பாங்குகளின் வெளிப்படுத்தல் மாத்திரம் மோதலில் பாலியல் வன்முறை சார்ந்த களங்கம் அல்ல. மக்கள் குழுக்கள் மற்றும் நிறுவனங்களின் நடத்தைகள் மற்றும் நடவடிக்கைகளின் ஊடாக வழங்கப்பட்ட, சமூகத்தில் விதைக்கப்பட்ட சமூக வழக்கங்களின் பலவந்தமான வெளிப்பாடாகும். அத்துடன், முரண்பாட்டின் முன்பிருந்த களங்கத்தின் விரிவாக்கமாகவும் உள்ளது.”

> *உலக நடவடிக்கைக்கான கோட்பாடுகளின் பிரதான அம்சங்கள்*
>
> 1. களங்கத்தின் அடிப்படை காரணிகளை அடையாளங் காணல்.
> 2. களங்கம் மீள உருவாகுவதை தவிர்த்தல்
> 3. களங்கம் சார் ஆபத்தினை குறைத்தல்
> 4. களங்கத்தை அகற்றுவதனை நோக்கிய முயற்சிகளின் மையமாக பாதிக்கப்பட்டு-தப்பியவர்கள்/தப்பியவர்கள் இருப்பதனை உறுதி செய்தல்.
> 5. வினைத்திறன் மிக்க களங்கத் தடுத்தலை முன்னெடுத்தல்.

## *பாதிக்கப்பட்டு-தப்பியவர்கள் எதிர்கொள்ளும் சவால்கள்*

- மீள நிகழலாம் மற்றும் மேலதிக களங்கம் பற்றிய அச்சத்தினால் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் பாதிக்கப்பட்டு-தப்பியவர்கள் சட்ட உதவி பெறுவதில் இருந்து தவிர்க்கின்றனர். குற்றம் சுமத்தப்பட்டவர்கள் பொலிஸ் அல்லது இராணுவப் படையினரைச் சார்ந்தவர்களாக இருக்கும் போது இது முக்கியமாக இருக்கின்றது. சில சந்தர்ப்பங்களில் நெருக்கமான வாழ்க்கைத் துணை, குடும்ப உறுப்பினர்களால் மேலதிக பாலியல் வன்முறைக்கு பாதிக்கப்பட்டு-தப்பியவர்கள் ஆளாகின்றனர். சில சந்தர்ப்பங்களில் பொது அதிகாரிகளின் பாலியல் விருப்பு கோரல், பாலியல் தொழிலாளர்கள் மீதான பாலியல் வன்முறை, பாலியல் அடிமைத்துவத்திற்கு பலவந்தப்படுத்தல், மற்றும் பாலியல் இலஞ்சம் ஊடாக தொடர்ச்சியான வன்முறையாக மோதலுடன் தொடர்புடையதான பாலியல் வன்முறை விரிவடைகின்றது.

> ‘வன்முறையில் பாதிக்கப்பட்டு-தப்பியவர்களின் களங்கச் சக்கரம் என்பது பயங்கரமானது மற்றும் ஏற்றுக்கொள்ளப்பட முடியாததும் ஆகும். மோதலுடன் தொடர்புடையதான பாலியல் வன்முறையினால் அதிரச்சிக்குள்ளாகி, அதனை பயனுள்ள வகையில் கையாள்வதற்கு நிறுவனங்கள் தவறுகின்றமை மற்றும் அது மீள நிகழாமையை தடுக்காமையினால், சமூகத்தினால் உருவாக்கப்பட்ட இந்த கொடிய களங்கச் சக்கரத்திற்குள் தள்ளிவிடப்படுகின்றனர். மோதலுடன் தொடர்புடையதான பாலியல் வன்முறையிலிருந்து இயலுமான விரைவில் குணமடைவதற்கு மற்றும் மீள்வதற்கு பாதிக்கப்பட்டு தப்பியவருக்கு உதவுவதற்கு சமூக வலையமைப்புக்கள் மற்றும் குடும்பங்கள் தவறுவதை இது காட்டுகின்றது.’

- களங்கம் என்பது பாதிக்கப்பட்டு-தப்பியவர்களினால் தாங்கப்படும் தனியான விடயமல்ல. பலவந்த

இடப்பெயர்வு, குடும்ப உறுப்பினர்களின் இறப்பு, குடும்ப உறுப்பினர்கள் காணாமல் போதல், சொத்து இழப்பு, வாழ்க்கைத் துணையை இழத்தல், வாழ்வாதாரத்திற்கான சந்தர்ப்பங்கள் இன்மை, கண்காணிப்புக்கு ஆளாதல் மற்றும் ஏனைய வகையான துன்பங்கள் போன்ற முரண்பாடு சார்ந்த ஏனைய வகை அதிரச்சிகளை ஏற்கனவே அனுபவிக்கும் பாதிக்கப்பட்டு-தப்பியவர்கள் மீது சுமத்தப்படும் போது களங்கம் மேலும் அதிர்ச்சி மிக்கதாகின்றது.

## மோதலுடன் தொடர்புடையதான பாலியல் வன்முறை களங்கம் மற்றும் வன்முறைச் சக்கரம்

- மோதலுடன் தொடர்புடையதான பாலியல் வன்முறையினால் பாதிக்கப்பட்டு தப்பியவர்களுக்கு களங்கத்தின் உளவியல் தாக்கங்களை அடையாளப்படுத்துவதற்கான வழிகள் இல்லாத போது, அவர்கள் வன்முறையானவர்களாக மாறக்கூடும்.
- மோதலுடன் தொடர்புடையதான பாலியல் வன்முறை சம்பந்தப்பட்ட களங்கமானது அவர்களை மேலதிக வன்முறைக்கு ஆளாக்கக் கூடும்.

## சமூக-மத கட்டமைப்பாக களங்கம்

- மத நம்பிக்கைகள் மற்றும் கலாசார பழக்கங்களினால் செல்வாக்கு செலுத்தப்பட்ட பெண்மை பற்றிய சமூக வழக்கங்கள் மற்றும் எண்ணங்கள் களங்கத்தை உருவாக்குகின்றன
- பெண்ணின் உடல்/பாலியல்பு சார்ந்து அவரது மதிப்பு அல்லது அடையாளத்தை மேற்குறிப்பிட்ட சமூக நியமங்கள் தீர்மானிக்கின்றன.

> “மதத்திலிருந்தோ, சட்டத்திலிருந்தோ அல்லது சமுதாயத்திலிருந்தோ தப்பிக்க முடியாது.”
>
> -வல்லுறவுக்கு ஆளான பாதிக்கப்பட்டு-தப்பியவர்-

- “சமூகம் ஒன்று எவ்வாறு செயற்பட வேண்டும், ஆண்களும் பெண்களும் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதில் ஒரு நம்பிக்கை கட்டமைப்பு உள்ளது. அந்த நம்பிக்கை கட்டமைப்புக்கு புறம்பாக ஏதேனும் நடக்குமாயின், அது தவறாகக் கருதப்படும். அது தவறானது எனக் கருதப்பட்டது என்பதனை உறுதி செய்வதற்கான சமூகத்தின் அழுத்தமே களங்கமாகும்” என சேவை வழங்குநர் ஒருவர் குறிப்பிட்டார்.
- “களங்கத்தினால் பாதிக்கப்பட்டு-தப்பியவர்கள் மத நடைமுறைகளின் நிவாரணமளிக்கும் அம்சங்களிலும் பார்க்க அதன் எதிர்மறையான அம்சங்களைப் பற்றிய முன்தீர்மானிக்கப்பட்ட கருத்தினை கொண்டிருப்பர். களங்கத்தினை முன்னிறுத்துவதற்கு மதத்தின் அம்சங்களை சமூகம் பயன்படுத்துவது இதற்கான காரணமாக இருக்கலாம்” என்பது கற்கையில் கண்டறியப்பட்ட ஆச்சரியமான விடயமாகும்.

> “களங்கம் என்பது முத்திரை குத்துவது போன்றது. சமூகம் பாதிக்கப்பட்டவரை எவ்வாறு நடத்துகின்றது மற்றும் தனிநபர் எவ்வாறு வருந்துகின்றார். வீடமைப்பு, அயலவர்கள் சார்ந்து பாதிக்கப்பட்டவர்களுடன் கதைப்பதில்லை. பாதிக்கப்பட்டவரை பச்சாபத்துடன் பார்ப்பர். அவர்களுடன் இணைவதற்கு மக்கள் அஞ்சுவர். அச்சம், கலாசாரம், சமூக விதிமுறைகள் மற்றும் சமூகத்தின் அதிகார அமைப்பு என்பனவே களங்கத்திற்கு பங்களிக்கும் காரணிகளாகும்.”
>
> -சேவை வழங்குநர்-

## மோதலுடன் தொடர்புடையதான பாலியல் வன்முறையில் ஆண் பாதிக்கப்பட்டு-தப்பியவராக இருக்கும் களங்கம்

மோதலுடன் தொடர்புடையதான பாலியல் வன்முறையில் ஆண் பாதிக்கப்பட்டு-தப்பியவராக இருப்பது தொடர்பில் ஓரினச்சேர்க்கை விலக்கல் உள்ளது.

மோதலுடன் தொடர்புடையதான பாலியல் வன்முறையில் ஆண் பாதிக்கப்பட்டு-தப்பியவர்களை செவிமடுப்பதற்கு சமூகத்தில் போதியளவு இரக்கம், புரிந்துணர்வு மற்றும் ஆர்வம் என்பன இல்லை.

மற்றொரு ஆணினால் வல்லுறவு செய்யப்பட்ட ஆண்களை பலவீனமானவர்களாக மற்றும் “பெண்ணைப் போன்றவராக” இந்த சமூகம் கருதுகின்றது.

> “ஆணாதிக்க சமூகத்தில், ஆண் மீதான பாலியல் வன்முறை என்பது எப்போதும் வன்முறையாக பார்க்கப்படுவதில்லை. சித்திரவதை, பலாத்காரம் மற்றும் தவறான தொடுகை போன்ற வேறுபட்ட பதங்களை மக்கள் பயன்படுத்துவர். ஆண் ஒருவர் எவ்வாறு வல்லுறவுக்கு உட்படுத்தப்பட முடியும் என மக்கள் குழப்பம் கொள்கின்றனர். ஏனெனில், ஆண்களே வல்லுறவு செய்பவர்கள் எனவும் பெண்களே வல்லுறவுக்கு ஆளாகுபவர்கள் எனவும் நம்பப்படுகின்றது. நீங்கள் வல்லுறவில் பாதிக்கப்பட்டவராயின், நீங்கள் பெண்ணாகத் தான் இருக்க வேண்டும் என்ற எண்ணம் உள்ளது. நாட்டில் ஆணாதிக்கம் இன்றும் தொடர்கின்ற நிலையில், நான் பாலியல் வன்முறையில் பாதிக்கப்பட்டவன் எனச் சொல்வது அவமானமாக உள்ளது. பெயரிட்டு அழைக்கவும், அவமானப்படுத்தவும், பாதிக்கப்பட்டவர்களை இழிவாக நடத்தவும் சமூகத்தில் கூடுதல் சந்தர்ப்பத்தை அது ஏற்படுத்தி விடும்.”
>
> -வல்லுறவில் பாதிக்கப்பட்டு-தப்பிய ஆண் -

“ஆண்மை அற்றவர்களாக உணர்வதாக” ஆண் பாதிக்கப்பட்டு-தப்பியவர்கள் முறைப்பாடு செய்தனர். அத்துடன், தமது பாலியல் வன்முறை அனுபவம் தம்மை தாழ்வுச் சிக்கல்களுக்கு இட்டுச் சென்றதாகக் குறிப்பிட்டனர்.

## களங்கத்தின் தாக்கம்

- யுத்த மோதல் முடிவதோ அல்லது வேறு மோதல் முடிவதோ மோதலுடன் தொடர்புடையதான பாலியல் வன்முறை முடிந்துவிட்டது என்ற கருத்தைத் தராது. மோதலுடன் தொடர்புடையதான பாலியல் வன்முறை சம்பந்தப்பட்ட களங்கமானது மேலதிக பாலியல் வன்முறை அல்லது சமூகத்தில் இருந்து ஒதுக்கப்படலுக்கு வழி கோலும். இந்தப் பிரச்சினைகளின் மூலம் மோதலுடன் தொடர்புடையதான பாலியல் வன்முறை மற்றும் அதன் தொடர்ச்சியான யதார்த்தங்களில் தங்கியிருக்கின்றது. விசேடமாக, களங்கமானது மோதலுடன் தொடர்புடையதான பாலியல் வன்முறையுடன் சம்பந்தப்பட்டது என்பதால், மோதல் முடிந்த பின்னரும் தொடர்கின்றது.

> “ஆயுத மோதல் முடிவுக்கு வந்த போதிலும், பாதிக்கப்பட்டு-தப்பியவர்களுக்கான மோதலுடன் தொடர்புடையதான பாலியல் வன்முறை சம்பந்தப்பட்ட களங்கம் தொடர்கிறது என்பதே யதாரத்தம்”

- மோதலுடன் தொடர்புடையதான பாலியல் வன்முறையுடன் சம்பந்தப்பட்ட களங்கமானது நீண்ட காலத் தாக்கத்தைக் கொண்டிருக்கின்றது. மோதலுடன் தொடர்புடையதான பாலியல் வன்முறையில் பாதிக்கப்பட்டு-தப்பியவர்களின் வாழ்க்கையானது, பல்வேறு முன்னேற்றங்கள் மற்றும் மாற்றங்களைக் கண்ட சமுதாய வாழ்க்கையின் ஏனைய அம்சங்களின் ஊடாகவும் மாறாது இருக்கின்றது. களங்கத்தின் தாக்கம் “பரவலானது” மற்றும் பாதிக்கப்பட்டு-தப்பியவர்கள், அவரது குடும்ப உறுப்பினர்கள், சமுதாயம் மற்றும் பரந்த சமூகம் என்பவற்றை தாக்கக் கூடியது எனவும் கற்கை கண்டறிந்தது.

> “உடலில் எஞ்சியுள்ள காயங்கள் தவிர்த்து, மோதலுடன் தொடர்புடையதான பாலியல் வன்முறையினை நிரூபிக்க முடியாது என மற்றொரு பாதிக்கப்பட்டு-தப்பியவர் கூறினார். அவ்வாறே, அவர்கள் எதிர்கொள்ளும் மனஅதிர்ச்சி மற்றும் களங்கத்தினை ஏனையோரால் எண்ணிப் பார்க்க முடியாது. இது பாதிக்கப்பட்டு-தப்பியவரின் வாழ்க்கையில் தாக்கத்தை ஏற்படுத்துவதுடன், மோதலுடன் தொடர்புடையதான பாலியல் வன்முறையின் அதிர்ச்சியிலிருந்து மீள்வதற்கான மற்றும் களங்கத்தை எதிர்கொள்வதற்கான ஆற்றல்களையும் குறைத்துவிடுகின்றது”

### பாதிக்கப்பட்டு-தப்பியவர்களில் நேரடித் தாக்கம்

> “இந்தச் சம்பவத்திற்குப் பிறகு கிராமத்தவர்கள் என்னை வித்தியாசமாக நடத்த ஆரம்பித்தனர். நான் பேரூந்து நிலையத்தில் நின்றிருந்தால், அவர்கள் அங்கு வரமாட்டார்கள். நான் கிராம சந்தைக்குச் சென்றால் அவர்கள் என்னுடன் கதைக்கமாட்டார்கள். என்னுடைய உறவினர்கள், அவர்களது வீட்டுக்கு நான் வருவதை விரும்பவில்லை. நான் வித்தியாசத்தை உணர ஆரம்பித்தேன்.”

- தம்மைப் பற்றிய பாதிக்கப்பட்டு-தப்பியவரின் எண்ணத்தில் மாற்றம்.
- சுயமதிப்பு குறைதல்

> *பாதிக்கப்பட்டு-தப்பியவர்களின் சாதகமான அபிலாஷைகள்*
>
> “பாதிக்கப்பட்டு-தப்பியவர்களால் நினைவு மீட்டப்பட்ட மனஅதிர்ச்சி மற்றும் களங்கத்தின் மத்தியில், நம்பிக்கை, நீதி குறித்த சிறிதளவு அபிலாஷை வெளிப்பட்டது. அது வலுப்படுத்தல் உணர்வை அளித்தது. சுதந்திரமான வாழ்க்கை வாழ்வதற்கான தமது விருப்பத்தினை ஒரு பாதிக்கப்பட்டு-தப்பிய பெண் குறிப்பிட்டார். அத்துடன், வாழ்க்கையை விட்டுவிடக் கூடாது என்பதில் அவர் உறுதியாக இருந்தார். தமது வருமானம் மற்றும் வேலைவாய்ப்பு காரணமாக தாம் சௌகரியமாக உணர்வதாக மற்றுமொரு பாதிக்கப்பட்டு-தப்பிய பெண் கூறினார். சிறுவயதில் திருமணம் செய்த பாதிக்கப்பட்டு-தப்பியவர் ஒருவர், ஊக்கம் மற்றும் தன்னம்பிக்கையை வளர்ப்பதற்கான தேவையை குறிப்பிட்டார். தமது பாதிக்கப்பட்டு-தப்பியவர் என்ற நிலைமைக்கு மத்தியிலும் ஒன்றிணைவதற்கான உணர்வினை ஒரு பாதிக்கப்பட்டு-தப்பியவர் வெளிப்படுத்தினார். தமது வீட்டை மீளமைத்தல் மற்றும் வன்முறையின் காரணமாக பிறந்த தமது குழந்தைகளுக்கு ஆதரவளிப்பதற்கான அனைத்து வழி வகைகளையும் கண்டறிவதற்கு அவர் அர்ப்பணிப்புடன் உள்ளார். மோதலுடன் தொடர்புடையதான பாலியல் வன்முறையுடன் சம்பந்தப்பட்ட களங்கத்திற்கு எதிராக பரிந்து பேசியதன் காரணமாக அனுபவித்த களங்கத்தினால் தனது தாயுடனும், ஒரு சில குடும்ப உறுப்பினர்களுடனும் கிராமத்தை விட்டு வெளியேறி வேறிடத்தில் வாழ நேர்ந்த இன்னுமொரு பாதிக்கப்பட்டு-தப்பியவர், வலுப்படுத்தல் உணர்வினை மேம்படுத்தல் குறித்து கதைத்தார்.”

- பாதிக்கப்பட்டு-தப்பியவர்களின் அபிலாஷைகள் எதிர்மறையாக பாதிக்கப்படல். சுய குறைகூறல், உதவியின்மை, நம்பிக்கையின்மை போன்றவற்றில் பாதிக்கப்பட்டு-தப்பியவர்கள் சிக்கிக் கொள்வர். ‘செல்லாக் காசாக’ பாதிக்கப்பட்டு-தப்பிய ஒருவர் தம்மை விளக்கினார். அதாவது, சமூகத்தின் பார்வையில் தாம் மதிப்பை இழந்துவிட்டோம் என்ற அர்த்தத்தில் அவர் அதனைக் கூறினார்.
- குற்றம் சுமத்தப்பட்டவர்கள் இராணுவம் அல்லது பொலிஸைச் சேர்ந்தவர்களாக இருக்கும் போது,

குற்றவியல் நீதி முறைமையை நாடுவதற்கு பாதிக்கப்பட்டு-தப்பியவர்கள் பயந்தனர்.

- பாதிக்கப்பட்டு-தப்பியவர்கள் எவ்வித உணர்வும் இன்றி நடத்தப்பட்ட அல்லது உண்மை நிலவரப்படி நடத்தப்படாதநீதி முறைமையின் அதிகரித்த அதிகார தன்மையின் காரணமாக, நீதி முறைமையின் மீது இவர்களில் பெரும்பாலானோர் நம்பிக்கை இழந்துள்ளனர்.
- வாழ்க்கை ஆர்வம் குறைதல் அல்லது தற்கொலை எண்ணங்கள் தோன்றல்.

> "அதன் பின்னர் என்னால் அமைதி அடைய முடியவில்லை. குணப்படுத்தப்படாத காயமாக அது என் வாழ்க்கையில் இருக்கின்றது"

- பொதுவாக, மோதலுடன் தொடர்புடையதான பாலியல் வன்முறை மற்றும் சம்பந்தப்பட்ட களங்கம் என்பன பாதிக்கப்பட்டு-தப்பியவர் வாழ்நாள் முழுதுமான மன அதிர்ச்சியை எதிர்கொள்ளவும், சில சந்தர்ப்பங்களில் உடல்சார் மற்றும்/அல்லது மனநலம் சார் பாதிப்புக்கும் காரணமாகின்றது.
- சில சந்தர்ப்பங்களில், மோதலுடன் தொடர்புடையதான பாலியல் வன்முறை மற்றும் களங்கத்திற்கு எதிராக ஆதரவு நாடுவது, பாதிக்கப்பட்டு-தப்பியவர்களின் வாழ்க்கைக்கு அச்சுறுத்தலாக மாறியுள்ளது.

> "அச்சம் காரணமாக நான் மருத்துவ உதவி எதனையும் நாடவில்லை"
>
> "இல்லை, சட்டத்தின் பாதுகாப்பை நான் ஒருபோதும் நாடவில்லை"

- பால் ரீதியான நோய்கள் தொற்றக் கூடிய அச்சம்.
- குற்றமிழைத்தவர் மற்றும் அவர்களது குழுவுடன் "சேர்ந்திருந்தமை குற்றம்" சார்ந்த களங்கம்.
- கற்பு/கன்னித்தன்மை இழப்பு பற்றி கருதப்பட்ட அகௌரவம்.

> "தமது சமூக விழுமியங்களில் பால்நிலை பாரபட்சம் ஊறியுள்ள சூழலில் பாதிக்கப்பட்டவர்கள் வசிக்கின்றனர். தாம் அனுபவித்த சம்பவத்திற்கான நீதி அவர்களுக்கு கிடைப்பதில்லை, மாறாக எஞ்சுவது களங்கம் மாத்திரமே. எனவே அவர்கள் தமக்குள்ளேயே வருந்துவர். அது அவர்களுடைய நலனை பாதிக்கின்றது. சாதகமான சூழ்நிலைகள் இழக்கப்பட்டு, மீளத் திரும்பும் சந்தர்ப்பமும் அற்றுப் போகும். ஆரோக்கியமான சமூக வளரச்சியை இது பாதிக்கும்"

- விசேடமாக எதிரியின் குழந்தை என்பது சார்ந்து மகப்பேறு பற்றிய களங்கம்.
- ஆண் வல்லுறவு சம்பவங்களில் ஓரினச்சேர்க்கை விலக்கல்கள்.
- தம்மையும், தமது அன்புக்குரியவர்களை காக்க முடியாமை குறித்த அவமானம்.

> "ஆண் மொழிபெயர்ப்பாளர்கள் மாத்திரமே இருந்தமையால் பொலிஸில் முறைப்பாட்டினைச் செய்த போது நான் அவமானமாக உணர்ந்தேன். அதன் பின்னர் அவர் என்னை ஒரு சகோதரி போல கருதுவதாகவும், தயக்கம் இன்றி பேசுமாறும் கூறினார். அக்கறையுடன் அவர் விசாரித்தார்."

- பதிலடியாக மரணம்.
- கௌரவ கொலைகள்
- தற்கொலை

> "வல்லுறவின் காரணமாக எனக்கு குழந்தை பிறக்கப் போகின்றது என்பதனை அறிந்தவுடன் நான் அச்சம் கொண்டேன். "தந்தை அற்ற" குழந்தை ஒன்றை நான் சுமக்கப் போகின்றேன் என்பதனை அனைவரும் அறிந்ததும், அவர்கள் என்னை ஒதுக்கி வைக்க ஆரம்பித்தனர். என் குடும்பத்தினர் என்னை விரட்டினர். என்னால் கிராமத்தை எதிர்கொள்ள முடியவில்லை. இந்த சம்பவத்தின் பின்னர் ஒரு முறை மாத்திரமே நான் என்னுடைய கிராமத்திற்குச் சென்றேன். எனது தந்தை என்னை கொலை செய்யப் பார்த்தார். வீட்டை விட்டு விரட்டினார். கிராமத்தில் இருந்த எனது நண்பர்களும் என்னை ஒதுக்கினர். அதன் பின்னர் நான் கிராமத்திற்குச் செல்லவே இல்லை."

- சிகிச்சையளிக்கப்படாத நோய்கள்.
- பாதுகாப்பற்ற கருக்கலைப்பு
- பொருளாதார விலக்கல்
- கடும் வறுமை .
- பாலியல் தொழிலில் ஈடுபடுவதனை தெரிவு செய்தல் போன்ற குழப்பமான தீர்மானம் எடுத்தல் அல்லது விருப்பத்துக்கு மாறான தெரிவுகளை எடுத்தல் என்பவற்றுக்கு இந்தப் பெயரிடல் மற்றும் களங்கப்படுத்தல் என்பன பாதிக்கப்பட்டு-தப்பியவர்களை தள்ளியுள்ளது.
- தனிமைப்படுத்தப்பட்டதாக உணரல்.
- தாம் "இரையாக" கருதப்பட்டு இலக்கு வைக்கப்பட்டதாக மோதலுடன் தொடர்புடையதான பாலியல் வன்முறைக்கு ஆளான பாதிக்கப்பட்டு-தப்பியவர்கள் குறிப்பிட்டனர். பெரும்பாலும் அவர்கள் தனித்தும் அல்லது வாழ்க்கைத் துணையை இழந்தவர்களாகவும் இருக்கும் போதே இது அதிகம் நிகழ்கின்றது

> "மோதலுடன் தொடர்புடையதான பாலியல் வன்முறை மற்றும் களங்கத்தின் உடனடி விளைவுகள் பாதிக்கப்பட்டு-தப்பியவர்களை மன அதிர்ச்சி, களங்கம், வறுமை போன்ற கொடிய சக்கரத்திற்குள் சிக்க வைக்கும்"

> "அவர்கள் உதவாதது மாத்திரமன்றி, என் முகத்தைக் கூட பார்க்கமாட்டார்கள். அவர்களுக்கு இவ்வாறான சம்பவம் நடக்கும் போது இதனை புரிந்து கொள்வார்கள்"

### ஏனையோர் மீதான தாக்கம்

- மோதலுடன் தொடர்புடையதான பாலியல் வன்முறை மற்றும் அதனால் எழும் களங்கத்தினால் குடும்ப உறுப்பினர்கள் மற்றும் பாதிக்கப்பட்டு-தப்பியவர்களில் தங்கியிருப்பவர்களும் பாதிக்கப்படுகின்றனர்.
- பாதிக்கப்பட்டு-தப்பியவர்களின் பிள்ளைகள், விசேடமாக வல்லுறவினால் பிறப்பவர்கள் கிண்டலுக்கு உள்ளாவதுடன், உணர்வு ரீதியான மனஅதிர்ச்சியையும் எதிர்கொள்கின்றனர்.

> "எனக்கு திருமணமாகிவிட்டது. இரண்டு பிள்ளைகள் உள்ளனர். இந்த சம்பவத்திற்குப் பிறகு அவர்கள் விரக்தி நிலைக்குச் சென்றனர். எனது கணவர் என்னை அவமதிக்கவும், திட்டவும் தொடங்கினார். என்னால் அந்த சித்திரவதையை தாங்க முடியாது என்பதால், அவரிடமிருந்து நான் விலகினேன்"

- வல்லுறவின் காரணமாக பிறந்த குழந்தைகள் தமது இரத்த உறவுகளிடமிருந்து விலகி வாழச் செய்யப்படுகின்றனர்.
- பாதிக்கப்பட்டு-தப்பியவர் சமூகத்துடன் கொண்டிருக்கும் உறவு எதிர்மறையாக பாதிக்கப்படுகின்றது.
- பாதிக்கப்பட்டு-தப்பியவருடனான தொடர்பு காரணமாக அவர்களது குடும்ப உறுப்பினர்களும் களங்கத்தினை எதிர்கொள்கின்றனர்.

> "கிராமத்தில் உள்ளவர்களுடன் சிறந்த உறவினை கொண்ட நபராக நான் இருந்தேன். தற்போது நான் வெளியில் செல்வதில்லை. என்னுடைய குழந்தையை (பாலியல் வன்முறையின் காரணமாக பிறந்த) எடுத்துக் கொண்டு வெளியில் செல்ல எனக்குப் பயமாக இருக்கின்றது. என்னுடைய எதிர்காலம் அழிந்துவிட்டது."

- குடும்ப உறுப்பினர்கள் கிண்டல் மற்றும் தொந்தரவுக்கு ஆளாவர். இதன் விளைவாக அவர்களது வாழ்க்கைத் தரம் குறையும்.
- மோதலுடன் தொடர்புடையதான பாலியல் வன்முறையின் காரணமாக கர்ப்பந்தரிக்கும் போது, தாயின் ஊடாக குழந்தைக்கு பால்வினை நோய்கள் கடத்தப்படுவதற்கான ஆபத்து உள்ளது.

### மோதலுடன் தொடர்புடையதான பாலியல் வன்முறை சம்பந்தப்பட்ட களங்கத்தினால் வரும் பொதுவான விளைவுகள்

- சமூகத்துடன் வினைத்திறனுடன் ஈடுபடுவதிலுள்ள தடைகளானவை பாதிக்கப்பட்டு-தப்பியவர்கள் போதிய வருமானம் ஈட்டும் ஆற்றலை குறைக்கின்றன.
- சமூகம்சார் இலகுவில் பாதிக்கப்படும் தன்மைக்கு பொருளாதார பலவீனத் தன்மை துணைசெய்கின்றது. இது பாதிக்கப்பட்டு-தப்பியவர்கள் மற்றும் அவர்களில் தங்கியிருப்பவர்கள் மேலும் வன்முறைக்கு உள்ளாகும் கொடிய சக்கரத்திற்குள் தள்ளிவிடுகின்றது.
- மீட்கமுடியாத வகையில் பாதிக்கப்பட்டு-தப்பியவர்களின் பொது வாழ்க்கை மோசமடைவதற்கு மோதலுடன் தொடர்புடையதான பாலியல் வன்முறை மற்றும் அதனால் எழும் களங்கம் என்பன பங்களிக்கின்றன.
- மோதலுடன் தொடர்புடையதான பாலியல் வன்முறையினால் எழும் களங்கம் குறித்து விழிப்புணர்வு இன்மை அல்லது சமூக அலட்சியம் என்பவற்றினால் நிலைமாறுகால நீதிச் செயற்பாடுகளில் பாதிக்கப்பட்டு-தப்பியவர்கள் சிறிதளவோ அல்லது எவ்வித ஈடுபாட்டினையும் கொண்டிருக்கவில்லை.
- மோதலுடன் தொடர்புடையதான பாலியல் வன்முறை மற்றும் களங்கம் குறித்த விழிப்புணர்வு இன்மை மற்றும் கூருணர்வின்மை என்பன வன்முறை தொடர பங்களிக்கின்றன.
- பாலியல் வன்முறை சார்ந்த நன்கு வேரூன்றிய சமூக உளப்பாங்குகள் பாதிக்கப்பட்டு-தப்பியவர்களுக்கு எதிரான பாரபட்சமான உளப்பாங்குகள் அதிகரிக்க காரணமாகின்றன.
- பாதிக்கப்பட்டு-தப்பியவர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களுக்கு மேலதிக வன்முறை, இழப்பு அல்லது தீங்கு ஏற்படலாம் என்பதால் குற்றமிழைத்தவர்களை தண்டிப்பது சிக்கலானது.
- மோசமடையும் இனவிருத்தி ஆற்றல் குழு உயிர்வாழ்தலை எதிர்மறையாக பாதிக்கும்.
- களங்கத்தை எதிர்கொள்ள நேரிடும் என்ற அச்சம் காரணமாக பாலியல் வன்முறை குறித்து அறிக்கையிடப்படுவதில்லை.

> "என்னுடைய இணக்கம் இன்றி எனக்கு அநீதி இழைக்கப்பட்ட போதிலும், பாதிக்கப்பட்டவருக்கான நீதியை ஏற்றுக் கொள்வதற்கு சமூகமும், கலாசாரமும் தயாராக இல்லை. என்னை ஒரு களங்கப்பட்ட, கறையடைந்த நபராகவே என் அயலவர்கள் பார்க்கின்றனர். வித்யா இறந்து விட்டதால், அவரை இரக்கத்துடன் பார்க்கின்றனர். ஆனால் நான் உயிருடன் இருப்பதால் நான் சமூகத்திற்கு அவமானமுள்ளாவராகவே அவர்கள் பார்க்கின்றனர்"

## மோதலினால் பாதிக்கப்பட்ட சமூகங்களில் மோதலுடன் தொடர்புடையதான பாலியல் வன்முறையின் தீங்கு பயக்கும் விளைவுகள்

- மனஅதிர்ச்சி மற்றும் களங்கத்திற்கு இட்டுச் செல்லும் தீங்கினை மற்றவர்களால் எண்ணிப் பார்க்க முடியாது. பாதிக்கப்பட்டு-தப்பியவர்களின் வாழக்கையில் இது ஒன்றிணைந்த விளைவினைக் கொண்டிருக்கின்றது. மோதலுடன்

தொடர்புடையதான பாலியல் வன்முறையின் அதிர்ச்சியில் இருந்து மீள்வதற்கான மற்றும் களங்கத்தை எதிர்கொள்வதற்கான சாத்தியங்களை இது குறைக்கின்றது.

> “தாம் நம்பப்படல் வேண்டும் என்பதே பாதிக்கப்பட்டவர்கள் முதலில் எதிர்ப்பார்க்கும் விடயமாகும். உதவுதல், ஆதரவளித்தல், குறுக்கு பரிசோதனை என்பன அதனைத் தொடர்ந்து வரும். நம்பிக்கை என்பதே முதலில் வரும்”

- தாம் எதிர்கொண்ட வன்முறையின் காரணமாக ஒட்டுமொத்த சமூகத்தின் மீதும் பாதிக்கப்பட்டு-தப்பியவர்கள் விரோதம் கொண்டிருப்பதாக அவர்களின் அனுபவங்கள் வெளிப்படுத்தின. யுத்தத்திற்குப் பின்னரான சூழ்நிலையில் அத்தகைய விரோதம், நம்பிக்கையின்மை மற்றும் சமூகத்தின் மீதான வெளிப்படுத்தப்படாத கோபம் என்பன நல்லிணக்கத்தை எட்டுவதற்குத் தடையாக இருக்கின்றன.
- தாம் எதிர்கொண்ட வன்முறையின் காரணமாக ஒட்டுமொத்த சமூகத்தின் மீதும் பாதிக்கப்பட்டு-தப்பியவர்கள் விரோதம் கொண்டிருப்பதாக அவர்களின் அனுபவங்கள் வெளிப்படுத்தின. யுத்தத்திற்குப் பின்னரான சூழ்நிலையில் அத்தகைய விரோதம், நம்பிக்கையின்மை மற்றும் சமூகத்தின் மீதான வெளிப்படுத்தப்படாத கோபம் என்பன நல்லிணக்கத்தை எட்டுவதற்குத் தடையாக இருக்கின்றன.

தமக்கு நேர்ந்த தீங்கிற்கு இறுதியில் தாமே காரணம் எனக் குற்றஞ் சுமத்தப்படும் நிலைக்கு தள்ளும் சமுதாயத்தின் முன்தீர்மானம், ஒதுக்கப்படல் மற்றும் தொடர்புகளை துண்டித்துக் கொள்ளல் குறித்தும் பாதிக்கப்பட்டு தப்பியவர்கள் கதைத்தனர்.

## பால்நிலை நீதி கரிசனையாக மோதலுடன் தொடர்புடையதான பாலியல் வன்முறை மற்றும் சம்பந்தப்பட்ட களங்கம்

சமுதாயம் சார் மகளிர் அமைப்பில் சம்பந்தப்பட்டுள்ள சேவை வழங்குநர் ஒருவரின் கருத்திற்கமைய “சமூக விழுமியங்களில் பால்நிலை பாரபட்சம் ஊறியுள்ள சூழலால் பாதிக்கப்பட்டவர்கள் சூழப்பட்டுள்ளனர்”.

- **உலகளாவிய நடவடிக்கைக்கான கோட்பாடுகள்: மோதலில் பாலியல் வன்முறை சம்பந்தப்பட்ட களங்கத்தை தடுத்தல் மற்றும் அடையாளப்படுத்தல் ஆவணத்தில்** களங்கத்திற்கான அடிப்படைக் காரணியாக பால்நிலை சமத்துவமின்மை அடையாளங் காணப்பட்டுள்ளது. மோதலுடன் தொடர்புடையதான பாலியல் வன்முறையினால் எழும் களங்கமானது பால்நிலை நீதி கரிசனையாக கருதப்படல் வேண்டும் என அந்தக் கற்கை வலியுறுத்துகின்றது.
- மேலும், பாதிக்கப்பட்டு-தப்பியவர்களால் குறிப்பிடப்பட்ட கருத்துக்களுக்கு அமைய பால்நிலைக் கூறுகள் சார்ந்த சமத்துவமின்மை போன்ற அடிப்படை உரிமை மீறல்கள் சம்பந்தப்பட்ட விடயங்களை அடையாளப்படுத்துவது, களங்கத்தை பயனுறுதி மிக்க வகையில் அடையாளப்படுத்த உதவிகரமாக அமையும் என கற்கையில் வழங்கப்பட்ட பரிந்துரைகள் தெரிவிக்கின்றன.

## பரிந்துரைகள்

***“உலகளாவிய நடவடிக்கைக்கான கோட்பாடுகள்: மோதலில் பாலியல் வன்முறை சம்பந்தப்பட்ட களங்கத்தை தடுத்தல் மற்றும் அடையாளப்படுத்தல்” ஆவணத்தில் முன்வைக்கப்பட்டுள்ள பரிந்துரைகள்:***

- களங்கமானது மனித உரிமைகள் மீறலாக அடையாளப்படுத்தப்படல் வேண்டும் என இந்தக் கோட்பாடுகள் குறிப்பிடுகின்றன.
- களங்கத்தை அடையாளப்படுத்துவதற்கு வளமூட்டல் மற்றும் நிலைத்திருக்கும் தன்மை செயலேற்பாடுகளை அது பரிந்துரைக்கின்றது.
- பாதிக்கப்பட்டு - தப்பியவர்களின் வலையமைப்புக்களை உருவாக்கல்.
- பாதிக்கப்பட்டு-தப்பியவர்கள்/வல்லுறவினால் பிறந்த தப்பியவர்களின் பிள்ளைகளுக்கான பாதுகாப்பினையும், காவலையும் உத்தரவாதப்படுத்தல்.
- நடவடிக்கைக்கான அவசரத் தேவையையும் உலகளாவிய நடவடிக்கைக்கான கோட்பாடுகள் அங்கீகரிக்கின்றது.
- களங்கத்திற்கு எதிரான அணுகுமுறைகள் களங்கத்திற்கான அடிப்படைக் காரணிகளை அடையாளப்படுத்த வேண்டும்.
- களங்கத்திற்கு எதிரான அணுகுமுறைகளின் மையத்தில் பாதிக்கப்பட்டு-தப்பியவர்கள் இருத்தல் வேண்டும்.
- கலாசார ரீதியாக பொருத்தமான அணுகுமுறைகளை விருத்தி செய்யும் செயற்பாட்டில் பாதிக்கப்பட்டு-தப்பியவர்கள் உள்ளடக்கப்படல் வேண்டும்.

## கற்கையில் கவனத்தில் கொள்ளப்பட்ட கலந்தாலோசனை செயலணி (Consultation Task Force) பரிந்துரைகள்

- பாலியல் வன்முறை, மாற்றுத்திறன், உளச்சமூக தாக்கம் மற்றும் மனஅதிர்ச்சி உள்ளடங்கலாக உடல்சார் வன்முறை மற்றும் காயத்திற்கு இழப்பீடு வழங்குவதற்கு கலந்தாலோசனை செயலணி பரிந்துரைத்துள்ளது. நீதியை அணுகும் வசதியை உறுதி செய்வதற்கு பாதிக்கப்பட்டு-தப்பியவருக்கு சினேகப்பூர்வமான நடைமுறைகள் உள்வாங்கப்பட வேண்டும் எனவும் கலந்தாலோசனை செயலணி

மேலும் பரிந்துரைத்துள்ளது. பாதிக்கப்பட்டவர்கள் மீண்டும் மன அதிர்ச்சிக்கு உள்ளாகுவதனை தடுப்பதற்கு அத்தகைய நடவடிக்கைகள் உதவும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

- நிலைமாறுகால நீதி மற்றும் மோதலுடன் தொடர்புடையதான பாலியல் வன்முறை தொடர்பில் நீதிபதிகளும், சட்டத்தரணிகளும் பயிற்சிப் பெற வேண்டும் எனவும் கலந்தாலோசனை செயலணியின் அறிக்கை மேலும் பரிந்துரைக்கின்றது.
- சுயாதீனமான விசேட பாதிக்கப்பட்டு-தப்பியவர் மற்றும் சாட்சியங்கள் பாதுகாப்பு பிரிவு உருவாக்கப்படல் வேண்டும் எனவும் கலந்தாலோசனை செயலணி பரிந்துரைத்துள்ளது.
- வழக்காறு, சாதி போன்ற எந்த அடிப்படையிலும் பாகுபாடின்றி பெண்களின் பொருளாதார, அரசியல், சட்ட மற்றும் கலாசார உரிமைகள் உத்தரவாதப்படுத்தப்படல் வேண்டும் எனவும் கலந்தாய்வு படையணி மேலும் பரிந்துரைத்துள்ளது.

## கற்கையில் அடையாளங் காணப்பட்ட பொதுவான பரிந்துரைகள்

- மனநல கரிசனை ஒன்றாக களங்கத்தை அடையாளப்படுத்தும் வழிமுறைகளாக, களங்கத்திற்கு எதிரான சமுதாய அணிதிரட்டல் மற்றும் களங்கத்திற்கு எதிரான நடவடிக்கை என்பன அடையாளங் காணப்பட்டன. முதன்மைப்படுத்தல், மொழி மற்றும் வரைவிலக்கணம், தகவல், கல்வி, தொலைத்தொடர்புகள், வினைத்திறன் மிக்க முறைகள், ஊடகத்தை பங்காளராகப் பயன்படுத்தல், குடியுரிமை மற்றும் பங்குபற்றல் போன்ற செயலேற்பாடுகள் அதன்பொருட்டு கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளன.
- அனைத்து மனித உரிமைகள் அணுகுமுறையிலும் “களங்க கண்ணோட்டத்துடன்” பயன்படுத்தல் என்பது களங்கத்தை அடையாளப்படுத்தும் நோக்குடன் முன்வைக்கப்பட்ட மற்றொரு பொது பரிந்துரையாகும்.

## பாதிக்கப்பட்டு-தப்பியவர்களால் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகள்:

- களங்கத்தின் அழிவுப்பூர்வமான விளைவுகள் குறித்து பொது விழிப்புணர்வை ஏற்படுத்தல்.
- இழப்பீட்டு வடிவங்கள் தீர்மானிக்கும் போது களங்கம் குறித்து கவனம் செலுத்தல்.
- களங்கத்தின் தோற்றப்பாட்டிற்கு அரச சேவைகள் புரிந்துணர்வோடு நடந்து கொள்வதனை உறுதி செய்வதற்கு கட்டமைப்புசார் திருத்தங்களை மேற்கொள்வதற்கான தேவை.
- மேற்குறிப்பிட்ட பொதுவான பரிந்துரைகளுக்கு மேலதிகமாக, வேறுபட்ட அங்கங்கள் மற்றும்/அல்லது துறைகளுக்கு பிரயோகிக்கப்படக் கூடிய விசேட பரிந்துரைகளும்பாதிக்கப்பட்டு-தப்பியவர்களால் முன்வைக்கப்பட்டது.
- பாதிக்கப்பட்டு-தப்பியவர்களால் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகள் கீழ் காட்டியவாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன.

| அரசாங்கம் மற்றும் கொள்கை வகுப்பவர்களுக்கு: |
|---|
| மோதலுடன் தொடர்புடையதான பாலியல் வன்முறையில் பாதிக்கப்பட்டு-தப்பியவர்களினை பச்சாதாபத்துடனும், ஆதரவுடனும் நடத்தப்படுவதனை உறுதி செய்வதற்கு அரச முறைமைகளில் மற்றும் செயற்பாடுகளில் கட்டமைப்புசார் மாற்றங்களை வடிவமைத்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல். |
| பாதிக்கப்பட்டு-தப்பியவர்களுக்கு களங்க கூருணர்வு மிக்க இழப்பீட்டுத் திட்டத்தை வடிவமைத்து, நடைமுறைப்படுத்தல். |
| பாதிக்கப்பட்டு-தப்பியவர்களுக்கான சமவுரிமைகள் மற்றும் மதிப்பினை அனுபவிப்பதனை உறுதி செய்தல். |
| சட்டம் மற்றும் நடைமுறையில் சிறுவயதுத் திருமணத்தை தடை செய்தல் |
| பாலியல் வன்முறை மற்றும் மோதலுடன் தொடர்புடையதான பாலியல் வன்முறையினால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு பிறந்த பிள்ளைகளுக்கான விசேட ஆதரவு நிகழ்ச்சிகளை வடிவமைத்து, நடைமுறைப்படுத்தல். |
| வாழ்வாதார உதவிகளைக் கிடைக்கக் கூடிய, அணுகக் கூடியதாக மற்றும் சாத்தியமானதாகச் செய்தல். |
| இயன்ற வரையில் அத்தகைய பாதிக்கப்பட்டு தப்பியவர்களை மோதலுடன் தொடர்புடையதான பாலியல் வன்முறைக்கு முன்னர் அவர்கள் மகிழ்ந்திருந்த வாழ்க்கைத் தரத்திற்கு திரும்பச் செய்யும் நோக்குடன் களங்கத்தினால் பாதிக்கப்பட்டு-தப்பியவர்களுடன் கலந்தாய்வுடன் அவர்களுக்கான சமூக ஒருங்கிணைத்தல் நிகழ்ச்சிகளை வடிவமைத்தல். |
| மோதலுடன் தொடர்புடையதான பாலியல் வன்முறையினால் பாதிக்கப்பட்டு-தப்பியவர்கள் மற்றும் அவர்கள் எதிர்கொள்ளும் களங்கத்தை எவ்வாறு கையாள்வது என்பது தொடர்பில் பொது அதிகாரிகளுக்கு பயிற்சியளித்தல். |
| பாலியல் தொழிலாளர்களின் மனித உரிமைகள் மற்றும் சுதந்திரத்தை காக்கும் நோக்குடன் பாலியல் தொழிலுடன் சம்பந்தப்பட்ட களங்கத்தை அடையாளப்படுத்துவதற்கு விசேட நிகழ்ச்சிகளை வடிவமைத்தல். |
| பாதிக்கப்பட்டவர் அல்லது குற்றமிழைத்தவரின் பால் பற்றிய பாரபட்சமின்றி, இணக்கமின்றிய பாலியல் உடலுறவைக் குற்றமாக்குவதற்கு வல்லுறவிற்கான பரந்த விளக்கமளித்தல். |
| குடும்ப ஆதரவு அல்லது வருமானம் எதுவுமின்றி உள்ளப் பெண்களுக்கான சமூகப் பாதுகாப்பு நிகழ்ச்சிகளை வலுப்படுத்தல். |
| மோதலுடன் தொடர்புடையதான பாலியல் வன்முறை மற்றும் களங்கத்தின் பாதிக்கப்பட்டு-தப்பியவர்களின் கரிசனைகளை அடையாளப்படுத்துவதற்கு நிலைமாறு கால நீதி மற்றும் நல்லிணக்கத்திற்கான கொள்கைகள் மற்றும் செயலேற்பாடுகளை உள்வாங்கல். |

### சுகாதார அமைச்சுக்கு:

குறிப்பாக சேவை குறைந்த மோதலினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் அடிப்படை சுகாதாரம், கல்வி, சமாதானம், மற்றும் ஏனைய சேவைகள் கிடைக்கக் கூடியதாகவும், அணுகக் கூடியதாகவும் செய்தலை உறுதி செய்தல்.

மோதலினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் விசேட பயிற்சியளிக்கப்பட்ட உளவளத்துணையாளர்கள் மற்றும் பொலிஸ் அதிகாரிகள் போன்ற மேலதிக இலக்கு வைக்கப்பட்ட சேவைகளை அடையாளங் காணல் மற்றும் வழங்கல்.

பாதிக்கப்பட்டு-தப்பியவர்களுக்கு தொழில்சார் மற்றும் இரக்கம்சார் உளவளத்துணை சேவைகளை வசதியளித்தல்.

### கல்வி அமைச்சுக்கு:

சிறுவர்களுக்கான தடுப்பு மற்றும் வலுப்படுத்தல் செயலேற்பாடாக பாடசாலைகளுக்கான சம்பந்தப்பட்ட பாலியல் மற்றும் இனவிருத்திச் சுகாதார நிகழ்ச்சிகளை நடைமுறைப்படுத்தல்.

மகப்பேறு/பிரசவத்திற்குப் பிறகு சிறுமியர் பாடசாலை திரும்புவதனை அனுமதித்தல். பாலியல் வன்முறையில் இருந்து மீட்சி பெறும் மாணவர்களை மீள்ஒருங்கிணைப்பதற்கு ஆசிரியர்களை கூருணர்வாக்கல்.

### ஊடக அமைச்சுக்கு:

நியாயமற்ற அறிக்கையின் காரணமாக ஏற்படுத்தப்பட்ட களங்கத்தை தடுக்கவும், மோதலுடன் தொடர்புடையதான பாலியல் வன்முறையினை கையாளவும் ஊடகத்துடன் பங்காளராதல்.

மோதலுடன் தொடர்புடையதான பாலியல் வன்முறையில் பாதிக்கப்பட்டு தப்பியவர்களின் வலி மற்றும் அதிர்ச்சியை நினைவுகூரல். அத்துடன், பாதிக்கப்பட்டு-தப்பியவர்களின் குரல்களை எழுப்பவும், அங்கீகரிக்கப்படவும் பொதுத் தளங்களை உருவாக்கல். இது மோதலுடன் தொடர்புடையதான பாலியல் வன்முறையில் பாதிக்கப்பட்டு-தப்பியவர்கள் தனிநபர்களாக கண்ணியம் மற்றும் உரிமைக்கான சமுதாய அங்கீகாரத்தை பெற உதவும்.

### பொலிஸ் திணைக்களத்திற்கு:

முறையான விசாரணைகள் மற்றும் வழக்கு தொடரல்களுடன் மோதலுடன் தொடர்புடையதான பாலியல் வன்முறைக்கான தண்டனை பயமின்மை அடையாளப்படுத்தப்படல் வேண்டும்.

தமது சிக்கலான குற்றவுணர்வு மற்றும் சுய குற்றம் கூறலை கையாள்வதற்கும், புரிந்துகொள்வதற்கும் உதவுவதற்கு மோதலுடன் தொடர்புடையதான பாலியல் வன்முறையில் பாதிக்கப்பட்டு-தப்பியவர்களை கையாள்வதற்கு விசேட பயிற்சி அளித்தல்.

மோதலுடன் தொடர்புடையதான பாலியல் வன்முறைச் சம்பவம் மற்றும் அவர்களது வாழ்க்கையில் அதன் தாக்கத்தை விளக்குவதற்கு பாதிக்கப்பட்டு-தப்பியவர்களுக்கான புரிந்துணர்வுள்ள மற்றும் நம்பகமான சூழலை உருவாக்கல்.

அனைத்து மட்டங்களிலும் மோதலுடன் தொடர்புடையதான பாலியல் வன்முறையினை கையாள்வதில் இயலுமான வரையில் பாதிக்கப்பட்டு-தப்பியவரின் அடையாளத்தினை இரகசியமாக வைத்திருப்பதனை உறுதி செய்தல்.

### நீதி அமைச்சு மற்றும் சட்ட உதவி ஆணைக்குழுவுக்கு:

மோதலுடன் தொடர்புடையதான பாலியல் வன்முறையில் பாதிக்கப்பட்டு-தப்பியவர்களுக்கு நீதிக்கான அணுகும் வசதியை உறுதி செய்தல்.

முறைப்பாடுகளைச் செய்வதற்கு ஆதரவு வழங்கல், வழக்கு செயல்முறையில் ஆதரவு வழங்கல், சட்ட அறிவுடன் உதவி வழங்கல் மற்றும் தேவையாயின் நிதி உதவி வழங்கல்

மோதலுடன் தொடர்புடையதான பாலியல் வன்முறையில் பாதிக்கப்பட்டு தப்பியவர்களுக்கு காவலிடங்களை வழங்கல்.

மோதலுடன் தொடர்புடையதான பாலியல் வன்முறையின் காரணமாக கர்ப்பந் தரித்தல் சார்ந்து பாதிக்கப்பட்டு-தப்பியவர்களால் தகவலறிந்த தெரிவுகளை மேற்கொள்வதற்கு உளவளத்துணை சேவைகளை கிடைக்கச் செய்தல்.

### நீதித்துறை மற்றும் சட்ட தொழிலுக்கு:

மோதலுடன் தொடர்புடையதான பாலியல் வன்முறை தொடர்பில் அவர்களை கூருணர்வுபடுத்துவதற்கு நீதித்துறைக்கான பயிற்சிகளை வழங்கல்.

மோதலுடன் தொடர்புடையதான பாலியல் வன்முறை குறித்த கூருணர்வுபடுத்தல் உள்ளடங்கிய தொடர்ச்சியான தொழில்சார் பயிற்சி நிகழ்ச்சிகளை நடைமுறைப்படுத்தல்.

பாதிக்கப்பட்டு-தப்பியவர்களுக்கான உதவிநாடி உளவளத்துணையை முன்னெடுத்தல்.

### சமுதாயம் சார் நிறுவனங்களுக்கு:

களங்கம் தொடர்பில் இளைஞர் மத்தியில் உளப்பாங்குசார் மாற்றத்திற்கு செயலமர்வுகள் மற்றும்/அல்லது நிகழ்ச்சிகளை வடிவமைத்து, நடைமுறைப்படுத்தல்.

களங்கம் குறித்து பொதுக் கலந்துரையாடல்களை உருவாக்கல். அத்துடன், சமூகத்திற்குள் நிலையான உளப்பாங்குசார் மாற்றத்தை கொண்டு வருவதற்கு நீண்ட காலத்திற்குச் செயற்படல்.

### மத நிறுவனங்களுக்கு:

ஆயுதமோதலின் காரணமான களங்கத்தின் தாக்கத்தினை கவனத்தில் கொண்டு, சமுதாயங்களுக்கு இடையிலான உறவுக்கான அர்த்தமுள்ள நிகழ்ச்சிகளை வடிவமைத்து நடைமுறைப்படுத்தல்.

மத நடைமுறைகள் எவ்வாறு களங்கத்தை ஊக்குவிக்கும் என்பது தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு மதத் தலைவர்கள், நிறுவனங்கள் மற்றும் சமுதாயங்களை ஈடுபடுத்தல்.

பாதிக்கப்பட்டு-தப்பியவர்கள் களங்கத்தில் இருந்து குணமாகுவதற்கு மத நிகழ்ச்சிகள், மத்தியஸ்த நிகழ்ச்சிகளை விருத்தி செய்வதற்கு சமுதாயங்களுடன் பங்காளராதல்.

**சமத்துவம் மற்றும் நீதிக்கான நிலையம் (Centre for Equality and Justice)**
325 ஏ1, திம்பிரிகஸ்ஸாய வீதி கொழும்பு 05 | தொலைபேசி/தொலைநகல்: +94 11 2055404, 2501457
மின்னஞ்சல்: srilanka.cej@gmail.com | இணையதளம்: www.cejsrilanka.org
https://www.facebook.com/Centre-for-Equality-and-Justice https://twitter.com/CEJ_SriLanka https://www.instagram.com/cej_srilanka/